REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 4உ சனி (20—8—55) ★ ★ வெளியூர்: ஆவணி 5உ ஞாயிறு (21—8—55) [இதழ் 58

இந்தியாவில் அணுசக்தி ஆராய்ச்சி நிலையங்கள்!

ஜினிவா, ஆக. 18—

"இந்தியாவில் அணுசக்தி ஆராய்ச்சி நிலையங்கள் கட்டத் துவங்கும் வேலைகள் 1962—67-ம் ஆண்டுகளுக்கிடையில் துவங்கிவிடும்"

—என்று, பிரிட்டிஷ் அணுசக்தி ஆராய்ச்சி நிலைய டைரக்டரான சர் ஜான் சாக்கி ராப்ட் இன்று இங்கு தெரிவித்திருக்கிறார்.

கோவா விடுதலைப் போர்:

நேருவின் உளுத்துப்போன கொள்கை!

முன்னுக்குப் பின் முரண்படப் பேசும் போக்கு!

'விடுதலை வீரர்களுக்கு ஏன் பாதுகாப்பு இல்லை?'

சென்னை கடற்கரை பொதுக்கூட்டத்தில் என். வி. நடராசன் இலட்சிய பரணி

"இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள ஒவ்வொரு முக்கிய பகுதியும், உரிமையுடன் இயங்க வேண்டுமென்ற கொள்கையில் இந்தியப் பேரரசுக்கும்—திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே வேறுபாடுகளிருப்பினும், பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்தில் அந்நிய ஏகாதிபத்தியங்கள் எதுவும் தனது ஆதிக்கத்தை நிரந்தரமாக்கிக்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளையும் அனுமதிக்க முடியாது; உலகிலுள்ள மிகப் பெரிய—வலிமை வாய்ந்த வல்லரசுகளெல்லாம் ஓரளவு மனவளம் பெற முயற்சித்துவரும் இந்நாளில், போர்ச்சுகீசிய சர்க்கார் அடக்குமுறைத் தாண்டவம் புரிவதும், இந்தியத் துணைக் கண்டத்தில் தனக்குப் பிடிப்பு வேண்டுமென்று விரும்புவதும் விந்தையாகவேயிருக்கிறது!

"இந்தியப் பிரதமர் நேரு அவர்கள், 'கோவா போராட்டத்தில் துளி இரத்தம்கூட சிந்தாமல் வெற்றிபெற வேண்டும்' என்று கூறி வருகிறார்; இதற்கேற்பவே, இரண்டாண்டுகளுக்கு முன், இந்திய எல்லையை விட்டு கோவாவுக்குள் பிரவேசித்த விடுதலை வீரர்களை தடுத்து நிறுத்தினர் இந்திய சர்க்கார்; ஆனால், இப்போது நடப்பது என்ன? கோவாவை மீட்கச் செல்லும் அறப்போர் வீரர்கள் இந்திய எல்லையை தாராளமாகக் கடக்க அனுமதியளிக்கப்பட்டிருக்கின்றனர்; ஆயுத பலமோ, அல்லது அரசியலாரின் வெளிப்படையான துணையோ இன்றி செல்லும் வீரர்களை, போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியம் மிருகத்தனமாகத் தாக்குகிறது; இந்நிலையிலும், இந்தியப் பிரதமர் நேரு அவர்கள், உளுத்துப்போன கொள்கையைப் பேசுவது முறைதானா என்று கேட்கிறோம்.

"இந்தியப் பிரதமர், 'அகில உலக அரசியல் மேதை'—ஒப்புக்கொள்கிறோம்; அவருக்கு உலக நாடுகளிடையே பெரும் புகழும் வளர்ந்து வருகிறது—அதையும் நாங்கள் மறுக்க விரும்பவில்லை; அவர் இணையற்ற சமாதானத் தூதர்—அதைக் கேட்க, எங்களுக்கும் மிக்க மகிழ்ச்சிதான்; ஆனால் இவ்வளவு புகழ்படைத்த இந்தியப் பிரதமர் நேரு, கோவா போராட்டப் பிரச்சினையில் கையாளும் முறை சரிதானா என்பதை, இம்மகத்தான மேடையில் வீற்றுள்ள மற்ற எல்லாக் கட்சித் தலைவர்களும் சிந்திக்கவேண்டுகிறேன்.

"கோவாவை, துளி இரத்தம் சிந்தாமலேயே பெறவேண்டுமென்ற எண்ணம் இந்திய சர்க்காருக்கோ, அல்லது, இந்தியப் பிரதமருக்கோ இருக்குமானால், அறப்போர் வீரர்களை இந்திய எல்லையைக் கடந்து செல்ல அனுமதிக்காமலிருக்க வேண்டும்; அனுமதித்துவிட்டபின், போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியம் கொடுமைப்படுத்தத் துணிந்திருப்பதைத் தடுக்கவேண்டும். விடுதலை வீரர்கள் கொடுமைகளுக்கு ஆளாகிவரும் அநீதியைக் கண்ட பிறகும் இந்தியப் பிரதமர் இரண்டாண்டுகளுக்கு முன் செய்து வந்த உபதேசத்தை மீண்டும் செய்வது, அவரின் நடவடிக்கையிலுள்ள முன்னுக்குப்பின் முரண்படும் போக்கை எடுத்துக் காட்டவில்லையா என்று கேட்கிறேன்.

"எனவே, இதுவரை இந்திய சர்க்கார் கையாண்டு வந்த முறைகளைக்கூட மறந்துவிடுவோம்; இனியாகிலும், தெளிவுடன் ஆவன செய்ய முன் வருவார்களா என்பதே இம்மகத்தான கூட்டத்தின் கேள்வியாக இருக்கவேண்டும்."

—இவ்வாறு, 18-ந் தேதியன்று, சென்னை ஐகோர்ட் கடற்கரையில், கோவா விடுதலைப் போராட்ட வீரர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டிக்கவும், உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு வணக்கம் செலுத்தவுமாக நடைபெற்ற சர்வகட்சி கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியத்தை அண்டைக்காய் ஏகாதிபத்தியம்—என, எனக்கு முன்பு பேசியவர்கள் வர்ணித்தார்கள்; ஏகாதிபத்திய வெறி கொசு அளவு இருந்தால்கூட, அதனால் ஏற்படும் கொடுமைகளை நாம் பார்த்துத்தான் வருகிறோம்.

"போர்ச்சுகீசிய சர்க்காருக்கு இவ்வித துணிவு வரக் காரணம் என்ன? இன்று 29 வீரர்களின்—

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியப் பேரரசின் நடவடிக்கை

அரசியல் உறவுகள் முறிவு

தூதுவராலயங்களை மூடிவிட உத்திரவு

புதுடில்லி, ஆக. 19—

பம்பாயிலுள்ள போர்ச்சுகீசிய தூதுவராலயத்தினையும், சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களில் உள்ள கௌரவ தூதுவராலயங்களையும் மூடிவிடும்படி போர்ச்சுகீசிய சர்க்காரை இந்திய சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

கோவாவில் உள்ள இந்தியத் தூதுவராலயத்தையும் மூடிவிட இந்தியப் பேரரசு முடிவெடுத்திருக்கிறது. வரும் செப்டம்பர் முதல் தேதியிலிருந்து, கோவாவில் உள்ள இந்தியத் தூதுவராலயம் மூடப்பட வேண்டும் என்று இந்திய சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

★

மீண்டும் போராட்டம் துவங்குகிறது

82 தொண்டர்கள் நுழைந்தனர்

ம சோ. கட்சியின் கூட்டுச் செயலாளரான ஆர் தத்வாட்டே தலைமையில், 82 போராட்ட வீரர்கள், இன்று மாலை கோவா எல்லைக்குள் நுழைந்திருக்கின்றனர்.

இந்தியா—கோவா எல்லையில் உள்ள ரேத்ராடா கிராமம் வழியாக அவர்கள் நுழைந்தனர் என்று தெரிகிறது.

★

மதுரை தந்த வீராங்கனை!

சென்னை, ஆக. 19—

கோவா அறப்போரில் ஈடுபட்டு படுகாயமுற்றுள்ள வீரப்பெண்மணி சுபத்ரா தேவி, மதுரையைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.

'சுபத்ராபாய் குணமடைந்து வருகிறார்; வெங்குர்லாவுக்கு மருத்துவமனையில் சிகிச்சை தரப்படுகிறது; அங்கு அவரது குண்டடிபட்ட கை வெட்டி எடுக்கப்படும்'

என்று, மத்திய பிரதேச முதன் மந்திரி பண்டித ரவிசங்கர் சுக்லாவுக்கு நேற்று மாலை தகவல் கிடைத்திருக்கிறதாம்

★

போர்ச்சுகல் கோரிக்கை

இணங்க இலங்கை மறுப்பு

கொழும்பு, ஆக. 19—

புதுடில்லியிலிருந்த தூதுவராலயத்தை மூடிவிடவேண்டியதாகிவிட்டதால், கொழும்பில் தூதுவராலயம் அமைத்துக்கொள்ள போர்ச்சுகீசிய சர்க்கார் அனுமதி கேட்டதாகவும், அக்கோரிக்கைக்கு இணங்க இலங்கை சர்க்கார் மறுத்துவிட்டதாகவும் இலங்கை அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

மாநிலங்கள் அனைத்திலும் அகதிகள் படையெடுப்பு!

கிழக்கு பாக். அகதிகளுக்கு முதற் சலுகை!

இடம் தேடும் குழு தென்னகத்தை ஊடுருவப்போகிறது

நேருவின் கட்டளையும் கிடைத்துவிட்டது!

கல்கத்தா, ஆக. 19—

மாநிலங்கள் அனைத்தும் அகதிகளின் மேய்ச்சல் காடாகும்!

தென்னகமும், அகதிகளின் வேட்டைக்காடாக ஆவதிலிருந்து தப்ப முடியாது!

அகதிகளின் பொருளாதாரச் சுரண்டல், தென்னிந்தியாவில் இனி தீவிரமாகும்!

திராவிடம் இனி அகதிகளின் படையெடுப்பால், மேலும் மேலும் சீரழிக்கப்படும்!

மாநில அரசாங்கங்கள் ஒவ்வொன்றும், தம் தம் மாநிலங்களில் அகதிகள் குடியேறி கொட்டம் அடிப்பதற்காக வசதியுடைய விசாலமான இடங்களைத் தேடி ஒதுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடவிருக்கின்றன; அந்த அளவிற்கு, கண்டிப்பான கட்டளையைப் பிறப்பித்திருக்கிறார் இந்தியப் பேரரசின் சார்பில், இந்தியப் பிரதமர் பண்டித நேரு!

'ஏக இந்திய'க் கோட்பாட்டிற்கு, திராவிடம் உள்ளிட்ட பிற மாநிலங்கள் கொடுக்க இருக்கும் விலையாகும் இது.

பொதுவாக அகதிகளுக்கு—அதிலும் குறிப்பாகக் கிழக்கு பாகிஸ்தான் அகதிகளுக்கு, இந்த இடம் ஒதுக்கல் ஏற்பாட்டில் முதற்சலுகை அளிக்கப்பட்டு இருக்கிறது.

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து அதிகப்படியான அகதிகள் மேற்கு வங்கத்தில் குடியேறுவதால், அப்படி வரும் அகதிகளை வேறு மாநிலங்களுக்குக் குடியேற்றுவதில் மேற்கு வங்க அரசாங்கம் அதிகமான அக்கறை காட்டக் கிளம்பியிருக்கிறது.

வங்காளிகளை வெளியேற்றவும், பிற மாநிலங்களில் அவர்களுக்கு வாழ்வு தேடவும், வங்காள மாநில அரசாங்கமே தீவிரம் காட்டுகிறது!

'எங்கே விசாலமான நிலப் பரப்பு இருக்கிறது? எங்கே வாழ வசதி மிகுதியாக இருக்கிறது? எது அகதிகள் தொழில் நடத்துவதற்கு ஏற்ற இடம்?'—என்பனவற்றை அறிய ஒரு குழு வரவிருக்கிறது, வெகு விரைவில்!

திட்டக் குழு, மத்திய அரசாங்க அகதிகள் மறு வாழ்வு அமைச்சர் துறை, மேற்கு வங்க அரசாங்கம் ஆகிய மூன்றின் சார்பிலும், மேற்குறிப்பிட்ட இடந்தேடும் குழு உறுப்பினர்கள் இடம் பெற்று இருப்பர்!

மாநில அரசாங்கங்களை நம்பாததின் எதிரொலி போலும் மேற்குறித்த குழு ஏற்பாடு!

கிழக்கு பாகிஸ்தான் அகதிகளை ஏற்றுக்கொண்ட அசாம், அல்லலுக்கு ஆளாகி இருப்பது, இத்துறையில் சிந்திக்கத்தக்கது.

பழி வாங்கும் போக்கு?

புதுடில்லி, ஆக. 19—

டில்லி சர்க்கார் மூன்றாம் பிரிவு குமாஸ்தாக்களில், கடந்த ஆகஸ்டு 16-ந் தேதியன்று, கோரிக்கை ஒலிமுழக்கம் எழுப்பி, ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காக, அந்த ஆர்ப்பாட்டங்கள்பற்றி உத்தியோக பூர்வமான அறிக்கைகளை உள்நாட்டிலாகா கேட்டிருக்கிறதாம்.

சுமார் 400 குமாஸ்தாக்கள் அன்று அரைகுறை உடைகளுடன் அலுவலகம் சென்றனர் என்பது தெரிந்ததே!

வீட்டு வாடகை

கட்டுப்பாடு மசோதா

மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடிப்பு

சென்னை குடியிருப்பு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும் மசோதா ஒன்று சட்டசபையில் நிறைவேறியது.

எல்லா நகரசபை நகரங்களிலும், இப்போது சட்டம் அமுலாகி வரும் பஞ்சாயத்துகளிலும், சட்டம் தொடர்ந்து அமுலிலிருக்கும்—என்ற ஒரு திருத்தத்தையும் சபை ஏற்றது.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 20—8—'55 சனி

பதவி பறிக்கப்பட்டதால்!

சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களைக் குறித்து, புதன்—சுக்கிரன்—பிரகஸ்பதி என்றெல்லாம், அவருடைய சீட கோடிகள் கூறிடக் கேட்டுக் கேட்டு, மக்கள் செவி செவிடுபட்டுப் போயிருக்கிறது. அவருடைய முக விலாசம், வசீகரத் தோற்றம் ஆகியவை பற்றித்தான் அந்தச் சீடர்கள் இதுவரை பாராட்டாமல் இருந்திருக்கிறார்கள் !

ஆச்சாரியார் கீதையின் பாதையில் நடப்பவர்; கண்ணன் காட்டிய வழியில் செல்லுபவர் என்றெல்லாம் அவரைக் குறித்துப் பேசப்படும்பொழுது, அவருடைய நண்பர்கள் காட்டாற்று நடையில் குழைந்து நெளிந்து புகழ்ந்திடக் கேட்டிருக்கிறோம்; ஆனால், அவரைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருக்கும் அவருக்குள்ள அதிகார வெறியை மட்டும் அவருடைய நண்பர்கள், உள்ளூர உணர்ந்திருந்தாலும், வெளிப்படையாகக் கூறிடுவதில்லை. 'அவருக்குள்ள அதிகார வெறிதான் அவருடைய வாழ்க்கை வரலாற்றில் பெரும் பகுதியாக இருக்கிறதே; அதைத்தான் அரசியல் அரிச்சுவடி அறியாதவர்களும் அறிந்துகொண்டு இருக்கிறார்களே; அந்த உலகறிந்த உண்மையை நாம் வேறு ஏன் எடுத்துக் கூறி உறுதி செய்ய வேண்டும்?' என்ற பெருமதியால் போலும், ஆச்சாரியாருடைய 'சின்ன திருவடிகள்' அது குறித்து பேசாமடைந்தகளாக இருந்து வருகின்றன!

சென்னையில் இறுதியாக முதல் அமைச்சராக ஆச்சாரியார் இருந்த காலத்தில், அவரை எதிர்க்கும் மாற்றுக் கட்சியினரைக் குறித்து அவர் ஏசும்பொழுதெல்லாம், 'அதிகாரத்தை இழந்துவிட்ட ஆத்திரத்தாலும்—அதுவும் நம்மால் அவர்களிடமிருந்த அதிகாரம் பறிக்கப்பட்டுவிட்டதாலும் —அவர்களுக்கு வேறு பணி இல்லாததாலும்; அவர்கள் நம்மை எதற்கெடுத்தாலும் எதிர்ப்பதையே ஒரு பெரும் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள்' எனக் குறிப்பிடுவது வழக்கம். அது அவருக்கு ஒரு தொத்து நோயாகவும் இருந்தது. எதிர்ப்பாளர்களின் உள்ளக்கிடக்கையையே மாசுபடக் கூறிவிட்டால், எதிர்ப்பாளர்களால் கூறப்படும் நேர்மையான காரணங்களுக்குத் தகுந்த நியாயம் காட்டி மறுக்க வேண்டிய கட்டாயம் தனக்கு இல்லாமல் போய்விடும் என்ற நம்பிக்கையில், ஆச்சாரியார் அந்தச் சருக்கல் போக்கை மேற்கொண்டிருந்தார்.

எதிர்ப்பிற்கான காரணங்களுக்குச் சமாதானம் கூற முயற்சிக்காது, எதிர்ப்பாளர்கள் மீது இட்டுக்கட்டிப் பழி சுமத்தி, அவர்கள்மீது பொதுமக்களை ஏவிவிட்டு வேடிக்கை பார்க்கவும், அதே நேரத்தில் அதே மக்கள் எப்பொழுதும்போல் தன்னை நல்லவராக நினைத்துக்கொண்டிருக்கும்படி ஏற்படுத்திக்கொள்வதும், ஆச்சாரியாருக்கு ஒரு காலத்தில் இலகுவாக இருந்தது. அந்த முறையில், தான் பூரிக்கும்படி, ஆச்சாரியாருக்கு மகத்தான வெற்றி கிடைத்துவந்த சம்பவங்களும் உண்டு. ஆனால், அந்தக் காலம், ஆச்சாரியார் பொது வாழ்வில் நுழைந்த காலம்—ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் மாவீரர் என்று மட்டுமே ஆச்சாரியாரை, மக்களில் பலர் மதிப்பிட்டுக்கிடந்த காலம். அந்த நிலை மாறி பல ஆண்டுகள் ஆகின்றன.

அவ்வுண்மையை ஆச்சாரியார் மறந்துவிட்டார்; அல்லது மறந்துவிட்டதுபோல் நடித்து வருகிறார். கால வேகத்தை, ஆச்சாரியார் சரியாகக் கணிக்கவில்லை; அல்லது கணிக்கத் தவறிவிட்டதாக மக்கள் நம்பிக் கிடக்கட்டும் என்ற அற்ப நினைப்பில் செயலாற்றி வருகிறார்!

ஆச்சாரியார் பொது வாழ்வில் நுழைந்த காலத்திற்கும், அவர் முதன் மந்திரி பதவியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட காலத்திற்கும் இடையில் எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஒவ்வொரு துறையிலும், திடுக்கிடத்தகுந்த புதுப் புது மாற்றங்கள் இவ்விடைக்காலத்தில் ஏற்பட்டுள்ளன.

சராசரி அறிவு பெற்றவர்கள், ஏற்பட்டுள்ள புதுப் புது மாற்றங்களை அணுகி, புத்தறிவு பெற்றுள்ளது போன்றே, ஆச்சாரியாரும் அம்மாற்றங்களுடன் நெருங்கிப் பழகி, புதுப் பயிற்சி பெற்றும் இருக்கிறார். இருந்தாலும், அப்புதுப் பயிற்சியை—அப்புத்தறிவை, தனது பிறவி இயல்புப்படி குறிப்பிட்ட ஒரு சாராரின் நலன்களுக்கு வேலியிட்டுக் காத்துக்கொள்ளவும், மற்ற பெருங்குடி மக்களுக்குக் கேடு பல சூழவுமே ஆச்சாரியார் பயன்படுத்தி வந்திருக்கிறார்—செயலாற்றியும் வருகிறார்—அதே நினைப்புடன்தான் அவர் இறுதி வரையில் இருக்கவும் இருப்பார்.

இடைக்காலத்தில் ஏற்பட்டுள்ள தீவிரமான மாற்றங்களால் ஏற்பட்டுள்ள அறிவாற்றலை தான் மட்டுமே பெற்றுள்ளதாகவும், மற்றும் பலர் பெற்றிருக்கவில்லை அல்லது தெளிவாகப் பெற்றிருக்கவில்லை என்றும் ஆச்சாரியார் முடிவு கட்டிக்கொண்டு இருப்பதில்தான், அவருடைய இடர்பாடுகளின் ஊற்றுக்கால் இருக்கிறது.

இந்த உண்மையை ஆச்சாரியாரால் அறிய முடியாது. அதை அறிந்துகொள்வதற்கு அவருடைய மூப்பு இடந்தராது — ஒப்புக்கொள்ளவும் செய்யாது.

உண்மை நிலையை ஒப்புக்கொண்டும் அறிந்துகொண்டுந்தான் ஆகப்போவது என்ன? அதனால் நாம் சாதிக்கப்போவதென்ன? அதனால் நாம் அனுபவிக்கப்போகும் பலன்தான் என்ன? பலன் அனுபவிக்கும் வயதைத்தான் நாம் கடந்துவிட்டோமே? இனிமேல் இளமைப் பருவத்திற்கு நாம் திரும்பிச் செல்லவா போகிறோம்?—இவை முதுமையில் ஆச்சாரியாருக்கு ஏற்பட்டுள்ள அருங் குணமாகும்! இப்போக்கில் சலிப்பும் உண்டு. பரிகரிக்க முடியாத சஞ்சலமும் உண்டு. மிதமிஞ்சிய அழுக்காறும் ஆத்திரமும் இருந்திடும் ஆச்சாரியாரின் நினைப்பும், எழுத்தும், பேச்சும், பிற செயல்களும் அவருடைய முதுமைப் பருவத்தின் திருவிளையாடலேயாகும். அவர் பம்பாய் பேச்சு இந்த உண்மையைத்தான் உறுதி செய்வதாக இருக்கிறது.

பாரசூட் மூலம்!

17 மைல் உயரத்திலிருந்து குதித்துப் பார்க்க முயற்சி

பாரசூட்டை விரிப்பதற்கு முன் அழுக்கம் குறைந்த வான வெளியில் எவ்வளவு தூரம் குதிக்க முடியும் என்பதைக் காண்பதற்கு, அடுத்த ஆண்டில் சில சோதனைகள் நடத்தப் போவதாக அமெரிக்க விமானப்படை இலாகா அறிவிக்கிறது.

90,000 அடிக்கு மேலேயிருந்து—அதாவது, ஏறக்குறைய 17 மைலுக்கு மேலேயிருந்து குதித்துப் பார்க்கப்படும்; இதுவரை 72,395 அடி உயரம்தான் பறந்திருக்கிறார்கள்!

இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள்

நிர்வாக அறிக்கை தரும் தகவல்

சென்ற ஆண்டில் சென்னை மாநிலத்திலுள்ளதும், சர்க்காரால் நடத்தப்படுவதுமான இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளிகள் விடுதிகளுக்கு மொத்தம் ரூபாய் 9,80,400 செலவாகியுள்ளதாம்; தனிப்பட்ட சங்கங்களினால் நடத்தப்படும் இத்தகைய பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்கியதில் ரூபாய் 3,30,500 செலவாகியுள்ளனவென்று தெரிகிறது.

மொத்தம் உள்ள இத்தகைய 12 பள்ளிகளில் 3,047 சிறுவர், சிறுமியர் இருக்கின்றனர்; இதில் 1,042 பேர் முதல் முதலாக குற்றம் செய்தவர்களாம்.

நகரசபை நிலங்கள்...

வரி விதிப்பு முறையில் மாறுதல்

சென்னை, ஆக. 18—

நகரசபை எல்லைக்குள் உள்ள விவசாய நிலங்களுக்கு ஆண்டு வாடகை அடிப்படையில், வரி விதிப்புக்குப் பதிலாக நிலங்களாகக் கருதி வரி வசூலிக்க நகரசபை சட்ட திருத்த மசோதா ஒன்று சட்டசபையில் கொண்டுவரப்பட்டு நிறைவேறியுள்ளது.

உத்தேசித்திருக்கிறார்கள் ?

புதுடில்லி, ஆக. 17—

செயற்கை முறையில் வைரக்கற்களை தயாரிப்பதற்காக சென்னை மாநிலத்தில், நீலகிரி மாவட்டம் பைகாராவில் தனிப்பட்டவர் நிர்வாகத்தில் ஒரு தொழிற்சாலையை நிறுவ உத்தேசித்திருப்பதாக, ராஜ்யங்கள் சபையில் கைத்தொழில் மந்திரி கனுங்கோ தெரிவித்திருக்கிறாராம்.

அமெரிக்க விமானத்தை சுட்டு வீழ்த்தினர்

சியோல், ஆக 18—

அமெரிக்க விமானம் ஒன்றை வடகொரிய பீரங்கிகள் சுட்டு வீழ்த்தியதாகவும், வீழ்த்தப்பட்ட விமானத்தைத் தேடிச் சென்ற மற்றொரு அமெரிக்க விமானத்திற்கு சேதம் ஏற்படுத்தியதாகவும், ஐ. நா. இராணுவ நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

'திராவிடம் பிரியும்வரை'

'புதுவை ஒரு தனித் தமிழ் நாடாக வேண்டும்'

புதுவையில் ஒரு புதிய முயற்சி

"தென்னிந்தியா, வட இந்தியாவிலிருந்து பிரிய வேண்டுமென பல நாள் கிளர்ச்சி நடைபெற்று வருகிறது; இதில் பல போராட்டங்களில் போராடி, வெற்றியும் கண்டிருக்கிறோம்;

"சென்ற ஆண்டு அக்டோபர் திங்கள் வரையில், இப்பகுதி, பிரெஞ்சு தொடர்புடனிருந்ததால், நாங்கள் நேரடியாகப் பங்கெடுத்துக்கொள்ள முடியாமலிருந்தது; ஆனால், நவம்பர் 1-ந் தேதியிலிருந்து இப்பகுதி டில்லி தொடர்புடன் நடந்து வருவதற்கு, இங்குள்ள சில புல்லுருவிகள் ஆதரவு அளித்து வருகிறார்கள்;

"இங்குள்ள மக்கள் பரம சாதுக்கள்; இவர்களை, அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு இந்திய அரசாங்கத்தின் பெயரால் வடநாட்டவர் ஆள்கின்றனர்;

"இந்நிலையில் திராவிட நாடு பிரியும் வரையில், ஓர் திராவிட தமிழனுடைய தலைமையின் கீழ் இப்புதுவை இராஜ்யம் தனி இராஜ்யமாகத் திகழ்ந்து, திராவிட நாடு பிரிந்ததும், இப்பகுதியும் திராவிடத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்று முடிவு செய்து, கழகங்களும் திறக்க ஆரம்பித்துவிட்டோம்;

"எங்களுடைய இந்த புனித இயக்கத்திற்கு ஆதரவளித்து, இங்குள்ள சாதுவான மக்கள், வடநாட்டு ஆட்சிக்கு அடிமையாகுமுன், தனிக் குடியரசாக தமிழன் தலைமையில் நடைபெற எடுத்துக் கொள்ளும் முயற்சிக்கு உங்கள் எல்லோருடைய ஆதரவும் கிடைக்கும்படி விண்ணப்பித்துக்கொள்கிறோம்,"

என்று, புதுவை இராஜ்ய குடியரசு நிர்மாணக் குழு, வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

தற்காலிக சர்க்கார் ஊழியர்களுக்கும் சலுகை!

சென்னை, ஆக. 18—

கெஜட் பதிவில்லாத சென்னை சர்க்கார் ஊழியர்களின் குழந்தைகளுக்கு தரப்பட்டுவரும் கல்விச் சலுகைகளை தற்காலிகமாகப் பதவி பெறும் ஊழியர்களுக்கும் தரலாம் என்று சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

1955—56 பள்ளி ஆண்டிலிருந்து அமுலுக்குவரும் இந்த உத்திரவுப்படி இந்த சலுகை பெறும் ஊழியர்கள், ஜூலை முதல் டிசம்பர் வரையிலோ, அல்லது, ஜனவரி முதல் ஜூன் வரையிலோ வேலையில் நீடித்து இருப்பவர்களாக இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆச்சாரியார் காணும் தோல்விப் படலம்!

புதுடில்லி, ஆக. 18—

"பி. சி. ஜி. ஊசி குத்தும் இயக்கம் பற்றி, இந்திய சர்க்கார், தங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ளப் போவதில்லை,"

என்று, சுகாதார இலாகா உதவி மந்திரி மரகதம்-சந்திரசேகரன், ராஜ்யங்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

தெரிந்து கொள்ளுங்கள்

★

இனி என்ன வேண்டும்?

புதுடில்லி, ஆக. 18—

இந்திய இரயில்வேக்களில், மூன்றாவது வகுப்புப் பெட்டிகளில், இன்னும் 926 பெட்டிகளுக்கு மட்டிலுமே மின்சார விசிறிகள் பொருத்தப்பட வேண்டியுள்ளனவாம்; அதற்கு மொத்தம் சுமார் ரூ 126 லட்சம் செலவாகுமாம்.

* * *

அவ்வளவுதானே?

1954—55-ம் ஆண்டில், இரயில்வேக்களுக்கு எதிராக நஷ்டஈடு கோரி மொத்தம் 3,95,598 மனுக்கள் அனுப்பப்பட்டன; இவற்றில் 3,69,707 மனுக்கள் புதியவை; 25,891 மனுக்கள், மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பழைய மனுக்கள் சம்பந்தப்பட்டவை. இவ்வாண்டில் மொத்தம் 4,03,378 நஷ்ட ஈடு மனுக்கள் தீர்த்து வைக்கப்பட்டன.

ஆனந்தமே-நம் வாழ்விலே!

இந்திய இசைக் கருவிகள் உற்பத்தியில் பயிற்சி அளிப்பதற்காக அகில இந்திய கைத்தொழில்கள் போர்டு சென்னையில் ஓர் நிலையத்தை நிறுவுமாம்!

என்ன திட்டங்களோ?

சிறு தொழில்களின் அபிவிருத்திக்காக, இவ்வாண்டு ஆரம்பத்திலிருந்து ஆகஸ்ட் 12-ந் தேதிவரை மொத்தம் ரூ. 1,02,32,926 செலவழித்துள்ளனராம். சிறு தொழில்களை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக, 26 மாநில சர்க்கார்கள் மத்திய சர்க்காருக்கு திட்டங்களை அனுப்பியிருக்கின்றனராம்.

நலமடைந்த பகுதிகள் எவைகளோ?

சமுதாய நலத் திட்ட நிர்வாக நிறுவனம், 12 மாநிலங்களுக்கு, புதிதாக 116 'தேசிய விஸ்தரிப்பு சர்வீஸ்' வட்டாரங்களை இப்பொழுது ஒதுக்கியுள்ளது. இவற்றில், அக்டோபர் 2-ந் தேதி யன்று வேலை துவக்கப்படும். ஆரம்ப வேலைகளுக்காக, வட்டாரமொன்றுக்கு ரூ. 5,000 வரை செலவிடுவதற்கும், மாநில சர்க்கார்களுக்குத் தேவையான கல்வி யோக்கியதாம்சம் பெற்ற சிப்பந்திகளுக்கும், தேர்ச்சிபெற்ற சிப்பந்திகளுக்கும் ஏற்பாடு செய்யும்படியும் மாநில சர்க்கார்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

தற்போது, 492 வட்டாரங்களில், அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன; மொத்தம் சுமார் ஆறு கோடியே இரண்டு இலட்சம் மக்களடங்கிய ஒரு இலட்சம் கிராமங்கள் பயன்பெற்று வருகின்றன.

செலவு எவ்வளவு?

சித்தரஞ்சன் ரயில் எஞ்சின் உற்பத்திசாலையில் செய்யப்பட்ட முதல் இரயில் எஞ்சினுக்கு ரூ. 7,13,000 செலவாயிற்றாம்; சமீபத்தில் கடைசியாக உற்பத்தி செய்யப்பட்ட எஞ்சினுக்கு இது வரை ரூ. 4,81,000 செலவாகியுள்ளதாம்.

வடக்கு ஏன் வாழாது?

1954 எப்ரல் 1-லிருந்து 1955 ஆகஸ்ட் 1-ந் தேதி வரை கல்கத்தாவில் உள்ள ஆறு தொழில் நிறுவனங்களிடம், மொத்தம் 25,624 கூட்ஸ் வாகன்களுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டனவாம்; 1955 ஜூன் இறுதிவரை மொத்தம் 11,845 வாகன்கள் கிடைக்கப்பெற்றனவாம்.

வடமேற்கு இந்தியா வளம் பெறுகிறது!

பாக்ரா அணைத் திட்ட வேலை முன்னேற்றம்

பாக்ரா அணையின் நிர்மாண வேலை இன்னும் 15 வாரங்களில் ஆரம்பமாகிவிடும்; ரூ. 60 கோடி செலவில் கட்டப்படும் இந்த அணை 680 அடி உயரம் இருக்கும்; இதைக் கட்டி முடிப்பதற்கு சுமார் 36 மாதங்களாகும் என்று தோன்றுகிறது. இந்த அணை கட்டி முடிக்கப்பட்டதும், உலகிலேயே மிக உயர்ந்த, நேர் புவியீர்ப்பு அணையாக விளங்கும்.

இத்திட்டத்தின் மூலம், உணவுத் தானியங்களும், வாணிபப் பயிர்களும் பல இலட்சம் மணங்கு உற்பத்தியாகும்; புதிய நகரங்கள் தோன்றும்; மேற்கொண்டும் சிறந்த கிராமங்கள் அமைக்கப்படும்; பெரிய, சிறு தொழில்கள் பலவும்; கிராமத் தொழில் நிலையங்கள் பலவும் தோன்றும்; தானியங்களைச் சேகரித்து வைக்க சிறந்த கிடங்கு வசதிகள் கிடைக்கும்; கிராமங்களிலும், நகரங்களிலும் மேற்கொண்டும் அநேக மக்களுக்கு வேலை கிடைக்கும்; பொதுவாக, மக்கள் அனைவருக்கும் புதிய நலன்களும், வசதிகளும் கிடைக்கும்.

அணைக்கும், அதைச் சேர்ந்த கட்டுமானங்களுக்கும், 50 லட்சம் கன கெஜம் காங்கிரீட் தேவைப்படுகிறது. இயந்திர சாதனங்கள் மூலம், இக் கட்டுமானங்கள் கட்டப்படும் இடங்களுக்கு, காங்கிரீட் எடுத்துச் செல்லப்படுகிறது.

பாக்ரா மலை இடுக்கின் வலது புறத்தில், சுமார் 7 லட்சம் சதுர அடி பரப்புள்ள இரு தளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

8,000-த்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு சர்க்காரே நேரிடையாக வேலை அளிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அணைக்கட்டுப் பிரதேசத்தில், பல இடங்களில், தொழிலாளர்களுக்கு குளிர்ந்த குடிதண்ணீர் கிடைப்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இப்பிரதேசத்தில், 8,000 தொழிலாளர்கள் இரவும் பகலுமாய் உழைத்துவந்தபோதிலும், இங்கு, ஈக்களே மொய்ப்பது இல்லை; சுகாதார முறை எவ்வளவு சிறந்த வகையில் அப்பிரதேசத்தில் அமுல் நடத்தப்பட்டு வருகிறது என்பதை, இது நன்கு எடுத்துக் காட்டுகிறது.

1959-ல் பூர்த்தியாகவிருக்கும் பக்ரா-நங்கல் திட்டம் மூலமாக, பஞ்சாப், பெப்சு, இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில், மொத்தம் சுமார் 60 இலட்சம் ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும்; அன்றியும், 140 இலட்சம் மக்களின் உழைப்புக்கு ஒப்பாக விளங்கும் 4 இலட்சம் கிலோவாட் மின்சாரமும் உற்பத்தியாகும்.

இந்திய இராணுவம் விரைகிறது

நாகர்கள் கிளர்ச்சியை ஒடுக்கவாம்

புதுடில்லி, ஆக 18—

"வடகிழக்கு எல்லைப்புற ஏஜென்சி பிரதேசங்களில், நடைபெறும் நாகர்களின் (தனிநாடு) கிளர்ச்சியை அடக்க சிவில் அதிகாரிகளுக்கு உதவி செய்வதற்காக, இந்திய இராணுவப் படை ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறது," என்று பண்டித நேரு மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"நாகர்கள் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டார்கள்," என்று, பண்டிதர் காரணம் கூறியிருக்கிறார்.

சென்னையில் ஒரு எஞ்சினியரிங் கழகம்!

இந்திய சர்க்கார் பரிசீலிக்கிறதாம்

வேலூர், ஆக. 18—

சென்னை மாநிலத்தில் ஒரு எஞ்சியனீரிங் கழகத்தைத் துவக்குவது பற்றி இந்திய சர்க்கார் பரிசீலித்துவருவதாக மாநில ரெவினியூ மந்திரி மாணிக்கவேலர் தெரிவித்திருக்கிறார்.

"நாட்டில் அதிகமான எஞ்சினியர்கள் தேவைப்படுகின்றனர்; இதனால், ஓய்வு பெறும் எஞ்சினியர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டிவருகிறது" என்றும் அவர் தெரிவித்தாராம்.

கரூர் கைத்தறி நெசவாளர் துயரம்!

சட்டசபையில் விவாதம்

சென்னை, ஆக. 18—

கரூர் கைத்தறி நெசவாளர் பிரச்சினை, இன்று சர்க்காரின் கவனத்திற்கு எதிர்க்கட்சியினரால் சட்டசபையில் கொண்டுவரப்பட்டது.

கரூர், அதன் சுற்றுப்புற பகுதிகளிலெல்லாம், கைத்தறி நெசவுக்கு முக்கியமான இடமென்றும், அங்கு அத்தொழிலில் 6,000 நெசவாளர்கள் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நெசவாளர்களுக்கு சில உரிமைகள் வேண்டுமென்று கேட்டதால், தொழிற்சாலைகளை, முதலாளிகள் மூடிவிடுகின்றனர்; ஆட்களை வெகுவாகக் குறைக்கின்றனர்—என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கையில் மந்திரி பக்தவத்சலம், குறிப்பிட்டதாவது:—

"கடந்த ஜூலை 29-ந் தேதியன்று, கரூரில் 45 தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் 2,000 நெசவாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்; தொழிற்சாலைச் சட்டத்தின்படி ஆஜர் பதிவு, லீவு வசதி முதலியன தர மறுப்பதே தொழிலாளர்களின் குறையாகும்; பெண் நெசவாளர்களுக்கு பிரசவத்தின்போது லீவு தர மறுப்பதும் மற்றொரு குறையாகும்;

"மேலும், ஒரு தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது; இது நியாயமான காரணத்தினால்தான் மூடப்பட்டிருக்கிறதா என்பது, சமரச நீதிமன்ற விசாரணையிலிருக்கிறது."

"உண்மையானதும், நியாயமானதுமான காரணங்களுக்காக ஆட்குறைப்பு செய்யப்பட்டால், சர்க்கார் குறுக்கிட்டு எதுவும் செய்ய இயலாது," என்றும் மந்திரி கூறினார்.

உத்திர பிரதேசத்தில் வெள்ளச் சேதம்

ரூ. 40 கோடி முதல் ரூ. 50-கோடிவரை இருக்குமாம்

உத்திரப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம் சுமார் 40 கோடி முதல் 50 கோடி ரூபாய் வரை இருக்கலாமென மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

வெள்ளத்தினால் சுமார் 80 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சேர்த்திருக்கிறார்களாம்!

சென்னை, ஆக. 18—

திருநெல்வேலிக்கும்—கன்னியாகுமரிக்குமிடையே இரயில் பாதை அமைக்கும் திட்டத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்திருப்பதாக சட்ட சபையில் மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

மதுரை மாவட்டத்தில் அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

22—8—55: மாலை 4 மணிக்கு: மதுரை அமெரிக்கன் கல்லூரி; இரவு 10 மணிக்கு: மதுரை: 'மணி மகுடம்' நாடகத் தலைமை.

23—8—55: மாலை 4 மணிக்கு: தேவதானப்பட்டி; மாலை 5 மணிக்கு: பெரியகுளம்; மாலை 7 மணிக்கு: ஆண்டிபட்டி இரவு 10 மணிக்கு: 'மணி மகுடம்' நாடகத் தலைமை.

24—8—55: மாலை 4 மணிக்கு: கம்பம் பொதுக்கூட்டம்; மாலை 6 மணிக்கு: போடிநாயக்கனூர்.

25—8—55: மாலை 4 மணிக்கு: மதுரை, தியாகராசர் கல்லூரி; மாலை 7 மணிக்கு: சோழவந்தான் பொதுக்கூட்டம்.

நாஞ்சில் மாவட்ட

தி. மு. கழகத் தோழர்கட்கு!

"நமது மாவட்டத்தில் கல்லூரியில் பயிலும் மாணவர்களும், இதர கழகத் தோழர்களும், மாவட்டக் கழகத்தின் சார்பில், சொற் பயிற்சி மன்றம் ஒன்று நிறுவி, அதன்மூலம் கழகத் தோழர்களுக்கு சொற் பயிற்சி அளிக்க வேண்டுமென்று என்னிடம் நேரிலும், கடிதமூலமும் கேட்டுக்கொண்டுள்ளார்கள்; எனவே, அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றவும், நம் கொள்கைகளை மாவட்டத்தில் பரப்பவும்வேண்டி, 26—8—55 மாலை 5-30 மணிக்கு, வடசேரி தி. மு கழக அலுவலகத்தில், 'அண்ணா சொற்பயிற்சி மன்றம்' ஒன்று நிறுவுவதற்கு வேண்டிய ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். சொற் பயிற்சி பெற விரும்பும் தோழர்கள் அன்றையக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன்,"

என்று, நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் வி.எம். ஜான் அறிவிக்கிறார்.

இந்தியக் குடிஉரிமைச் சட்டம்

தென் ஆப்பிரிக்க சர்க்கார் பரிசீலனை

இந்தியக் குடிஉரிமைச் சட்டத்தை அமுல் செய்ய கொண்டு வரப்பட்ட மசோதாவினால் ஏற்பட்ட 'புதிய நிலைமையை' சமாளிக்க, தென் ஆப்பிரிக்க சர்க்கார், தானும் புதிய தனது குடிஉரிமைச் சட்டத்தை அமுல் நடத்த ஏதுவாகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் இப்புதிய சட்டம், தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களை நேரடியாகப் பாதிக்கிறது என்று கருதப்படுவதால், தென் ஆப்பிரிக்க சர்க்கார், இந்திய சர்க்காரின் இப்புதிய சட்டத்தின் மீது தீவிர கண்ணோட்டம் கொண்டுள்ளனராம்.

"'வெளிநாடுகளிலிருக்கும் இந்தியர்கள், அவர்களது தகப்பனாரோ, பாட்டனாரோ, அல்லது முப்பாட்டனாரோ இந்தியக் குடிமகனாக இருந்தால் இந்தியக் குடிஉரிமையைப் பெறலாம்' என்று, இந்திய சர்க்கார் சட்டம் கூறுவதானது, தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள், இந்தியாவுடனுள்ள தங்களது தொடர்பை மேலும் வலுக்கச்செய்வதற்கான வழிவகைகளைத் தேடித் தருகிறது," என்றும் தென் ஆப்பிரிக்க சர்க்காரால் கருதப்படுகிறதாம்!

"வெளியிடங்களிலுள்ள இந்திய மக்கள் பிரச்சினைகளில் இந்திய சர்க்கார் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், உலக அரசியல் அரங்கில் இந்தியா தனது கரத்தை மேலும் வலுப்பெறச் செய்ய வேண்டுமென்ற நோக்கம் கொண்டுள்ளதென்பதை நன்கு தெளிவாகத் தெரிவிக்கின்றன" என்று, தென் ஆப்பிரிக்காவில் கருதப்படுகிறதாம்.

குஜிலியாம்பாறையில் பொதுச் செயலாளர்

மகத்தான வரவேற்பும் - பாராட்டும்

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 16—8—55 மாலை 3-30 மணிக்கு திண்டுக்கல் இரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்தார். திண்டுக்கல் தோழர்கள் பி. சமதர்மம் எம்.சி., ஆர். சின்னசாமி ஆகியோர் வரவேற்று, குசலிங்கம்பாறைக்கு பஸ் மூலம் அழைத்துச் சென்றனர்.

மாலை 6 மணிக்கு, அங்கு தாரை, தப்பட்டை, கிராமிய மேளவாத்திய முழக்கங்களோடு பல்லாயிரக் கணக்கான மக்கள் பின்தொடர பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் பி. சமதர்மம் ஆகியோரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

பொதுச் செயலாளர் அவர்களால் பல இடங்களில் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

வாணவேடிக்கையோடு, ஊர்வலம், பந்தலை வந்தடைந்தது; ஊர்வலத்தில் ஆண் பெண் குழந்தைகளோடு பல்லாயிரக் கணக்கானவர் கலந்துகொண்டனர்.

பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள 20 மைல் சுற்றுவட்டாரத்திலுள்ள பாளையம், அரவக்குறிச்சி, கல்லாறு, கல்லூர், கோவிலூர், இலுப்பப்பட்டி, போடிப்பட்டி, சுண்டக்காம்பாளையம், சத்திரப்பட்டி, ஈசத்தம், எரியோடு, குளத்தூர், சாணியூர், திண்டுக்கல் ஆகிய பகுதிகளிலிருந்து கால் நடையாகவும், சுமார் 162 மாட்டு வண்டிகளிலும் ஏராளமான மக்கள் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தனர்.

ஒலி பெருக்கியின் கோளாறுடன் பொதுக்கூட்டம் இரவு 9½ மணிக்கு தோழர் தனுஷ்கோடி அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. தோழர் நாவரசன் சிறிது நேரம் பேசினார்.

பின்னர், பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள், இன்றைய அரசியல் நிலை குறித்தும், சமுதாயத்தில் உள்ள ஏற்ற தாழ்வுகள் குறித்தும், தீண்டாமை குறித்தும், திராவிடம் தனி நாடாகப் பிரிவதற்குரிய ஆதாரங்களை எடுத்துக் காட்டியும், கழகத் தோழர்கள் கட்டுப்பாடோடு நடக்கவேண்டிய முறைபற்றியும் உணர்ச்சி மிக்க உரை நிகழ்த்தினார்.

இரவு 11 மணிக்கு இயக்கப் பிரச்சார நாடகம் நடைபெற்றது.

மழை பெய்துகொண்டே இருந்தும் இரவு 2 மணி வரை மக்கள் அமைதியோடு கேட்டுக்கொண்டு இருந்தனர்.

ஐக்கிய தமிழகம்

கரையாளர் கருத்து

செங்கோட்டை, ஆக. 19—

அமெரிக்கா சென்று திரும்பிய திரு. எல். எஸ். கரையாளரை ஐக்கிய தமிழகம் உருவாக்கும் பிரச்சினையைப்பற்றிக் கேட்டபோது, அவர் குறிப்பிட்டதாவது:—

"திரு-தமிழகத்திலுள்ள தாலுகாக்களில் செங்கோட்டை, தோவாளை, அகத்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய ஐந்தும் தாய்த் தமிழகத்துடன் முதலில் இணைந்துவிடுமென பத்திரிகைகள் தெரிவிக்கின்றன; அவ்விதமே நடைமுறையில், குறிப்பிட்ட ஐந்தும் இணையுமானால், திரு-தமிழக மக்கள் அதை ஆதரிப்பதில் நியாயமில்லை; ஆதரிக்கும்பட்சத்தில் சென்ற ஆண்டில், திரு-தமிழக மக்கள் நடத்திய போராட்டத்தை 'தென் திருவிதாங்கூர் போராட்ட' மாகத்தான் கருதமுடியும்; திரு-தமிழகம், தாய்த் தமிழகத்துடன் இணையவேண்டுமென்ற உரிமைக் குரல், அன்று தேவிகுளம், பீர்மேடு பகுதிகளிலிருந்துதான் பிறந்தது; அன்று வித்திட்டு, நம் தோளோடு தோள் நின்று போராடிய மக்களை விட்டு விட்டு, 'கிடைத்தது இலாபம்' என்ற கொள்கையில், ஐந்து தாலுகாக்களும் முதலில் இணைவதை ஆதரித்தால், அது பெரிய இனத் துரோகமாகும்; நெய்யாற்றின்கரை தாலுகாவில் தகராறு கிளம்புமானால், பாதியை விட்டுக்கொடுத்து, மறு பாதியை தாயகத்துடன் இணைக்க பாடுபட வேண்டுமே தவிர, மீதியுள்ள தாலுகாக்களை பிளவுபடுத்தி இணைக்கும் விஷயத்தில் நாம் எள்ளளவும் விட்டுக் கொடுக்கக்கூடாது; அதைவிட, திரு-கொச்சி மாநிலம் முழுவதும் சென்னையுடன் இணைந்துவிடுவதே நல்லது."

சத்துடன், ஆந்திராவில் இணைந்து கிடக்கும் தமிழ்ப் பகுதியான சித்தூரும் சேர்ந்த ஐக்கிய தமிழகம் உருவாகுவதையே பெரிதும் விரும்புவதாகவும், இதையே தாம் கமிஷனிடம் வாக்குமூலம் கொடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

உறவு முறிகிறது?

தென்கொரியா, ஜப்பானுடன் தொடர்பைத் துண்டித்துக் கொள்ளும் என்று தெரிகிறது.

தென்கொரிய தகவல் தரும் நிலையத்திலிருந்து வெளிவந்துள்ள அறிக்கை ஒன்றில், 'தாற்காலிகமாக தென்கொரியா ஜப்பானுடன் தொடர்ந்து, பேச்சு வார்த்தைகள் நடத்த மறுத்துவிடும்; கொரியர்கள் ஜப்பான் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்; அதேபோல, ஜப்பானில் உள்ள கொரியர்கள், தென்கொரியா வர அனுமதிக்கப்பட மாட்டார்கள்," என்று கூறுகிறது.

அஞ்சல் அலுவலக் சேமிப்பு பாங்கி

புதுடில்லி, ஆக. 18—

அஞ்சல் அலுவலக 'சேமிப்பு பாங்கி'களில், 'செக்' மூலம் பணம் வாங்குவதற்கு அனுமதிக்கும் மசோதா ஒன்று, டெல்லி ராஜ்யங்கள் சபையில் நிறைவேறியிருக்கிறது.

தற்போது பம்பாய் மாநிலத்தில் மட்டும்தான் இது அமுல் நடத்தப்படும்; பின்னர், போகப் போக, இதர மாநிலங்களுக்கும் விரிவு படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நகர அபிவிருத்தி மானியம் ரத்து!

சென்னை, ஆக. 18—

சென்னை நகர அபிவிருத்தி 'டிரஸ்ட் போர்டி'ற்கு சர்க்காரும், நகரசபையும் ஆண்டுதோறும் குறைந்தபட்சம் தலா இரண்டரை இலட்சம் ரூபாய் தரவேண்டுமென்று சென்னை நகர அபிவிருத்தி 'டிரஸ்ட்' சட்டத்திலிருப்பதை நீக்க, சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி கொண்டுவந்த திருத்த மசோதாவை, சட்டசபையின் இன்றையக் கூட்டம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

பெயர் சூட்டல்

14—8—55 மாலை 5 மணிக்கு, சென்னை—குயப்பேட்டை, வெங்கடாத்திரி நாய்க்கன் தெரு, 75—எண்ணுள்ள இல்லத்தில், தோழர் க. அன்பழகன் அவர்களால், சகுந்தலா — சாம்பசிவன் மகவுக்கு 'கலைச் செல்வி' என்று பெயர்சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 2 அன்பளிக்கப்பட்டது — வரப் பெற்றோம் — நன்றி—பொறுப்பாளர்.

பீகாரில் அமைதி

மாணவர்கள் ஊர்வலம்

கைதானோரை விடுவிக்கக்கோரிக்கை

பாட்னா, ஆக. 17—

பீகார் மாநிலத்தில், கடந்த சில தினங்களாக நடைபெற்ற கலவரங்கள் ஓய்ந்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

வெளி ஊர்களிலிருந்து வந்து சேர்ந்த பல மாணவர்கள், இன்று நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஒரு ஊர்வலம் நடத்தினர்.

இரவு நடைபெற்ற கூட்டத்தில், கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

மேலும், துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்ட போலீஸ் அதிகாரிகளைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கிவைத்து விசாரிக்க வேண்டும் என்றும், துப்பாக்கிப் பிரயோகத்தால் உயிரிழந்தவர்களின் அடுத்த உறவினர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டும் என்றும், விதிக்கப்பட்டுள்ள 144 தடையுத்தரவைத் திரும்பப் பெறவேண்டும் என்றும், அந்தக் கூட்டத்தில் கோரப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் ஊர்வலமாக வந்தபோது, பத்திரிகை அலுவலகங்கள் முன்கூடி, 'நடைபெற்ற சம்பவங்கள் பற்றி சர்க்கார் தரும் அறிக்கைகள் தவறானவை—பொய்யானவை என்பதால், பத்திரிகைகள், உண்மையான நிகழ்ச்சிகளையே பிரசுரிக்க வேண்டும்,' என்று குரல் எழுப்பினர்.

பாட்னாவில் நடைபெற்ற சம்பவங்களை ஒட்டி, மந்திரி சபையில் பிளவிருப்பதாக பத்திரிகைகள் சில வெளியிட்ட செய்திகள் தவறானவை என்றும், அப்படி ஏதும் இல்லை என்றும் சர்க்கார் விடுத்துள்ள குறிப்பு ஒன்று கூறுகிறது

* * *

சத்தியாக்கிரகம் செய்வார்கள்?

19-ந் தேதியன்று, பாட்னா கலாசாலை மாணவர்களின் செயல் கமிட்டி ஆதரவில் நடைபெற்ற 2,000 மாணவர்களின் கூட்டத்தில், இம்மாதம் 24-ந் தேதிக்குள் தங்கள் கோரிக்கைகள் ஏற்கப்படாவிட்டால், 27-ந் தேதியன்று பீகார் மாநிலம் முழுவதும் சத்தியாக்கிரகம் செய்யுமாறும், தொழில் நிறுத்தம் மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

தெற்கு - வடக்கு பூசல்!

சூடான் இராணுவத்தில் கலகம்

கார்டூம் (சூடான்) ஆக. 19—

சூடான் இராணுவத்தினரிடையே கைகலப்பு ஏற்பட்டிருக்கிறதாக அறிவிக்கப்படுகிறது.

மூன்று இராணுவ அதிகாரிகள் காணப்படவில்லை என்றும், சூடானின் தெற்குப் பகுதியில் இந்தக் கலவரங்கள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு இராணுவத்தில் தெற்கத்தியருக்கும் — வடக்கத்தியருக்கும் இடையேயுள்ள பூசல், எப்போதும் சூடான் சர்க்காருக்கு ஒரு பெரும் தலைவலியாக இருக்கிறதாம்!

நிலச் சீர்திருத்தம்

சட்ட ரீதியான சிக்கல்களை டில்லி பரிசீலிக்கிறதாம்!

புதுடில்லி, ஆக. 19—

நிலச் சீர்திருத்தப் பிரேரபணைகளைத் தயாரித்து அனுப்பும்படி, சென்னை சர்க்காரை திட்டக் குழு கேட்டிருக்கிறதாம்.

நில உடைமைக்கு அதிகபட்ச வரம்பு கட்டுவது சம்பந்தமாக, டில்லி சர்க்காருக்கு சில சட்ட ரீதியான கஷ்டங்களை சென்னை சர்க்கார் தெரிவித்திருக்கிறது. அது குறித்து இந்தியப் பேரரசின் சட்ட இலாகா பரிசீலனை செய்து வருகிறது.

ஆச்சாரியார் போக்கு!

சென்னை சட்டசபை உறுப்பினர்கள் கொதிப்பு

கண்டனத் தீர்மானம் வரும்?

பம்பாயில் ஆச்சாரியார் நடத்திய 'ஸ்டண்ட்'டைக் கண்டித்து, தீர்மானம் ஒன்று கொண்டுவரப் போவதாக, சென்னை சட்டசபை உறுப்பினர் ஒருவர் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

அந்தத் தீர்மானத்தின் விளைவுகளைத் தாம் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறாராம்.

'சட்டசபைக் கூட்டுக் கூட்டத்தில் கவர்னர் ஆற்றிய உரைமீது நடைபெற்ற விவாதத்தில்கூடக் கலந்து கொள்ளாது, பம்பாயில் போய் ஏன் இப்படி எல்லாம் இவர் பேசித் திரிகிறார்,' என்று பல உறுப்பினர்களும் குறைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

'மாநில நிலைகளுக்கு ஆச்சாரியாரும் பொறுப்பாளிதான்; ஏனெனில், அவரும் ஒரு மேல்சபை உறுப்பினராயிற்றே!'—என்று ஒரு உறுப்பினர் கூறினாராம்.

வேறொருவர் 'ஜனநாயக நாட்டில் கருத்தைத் தெரிவிக்க உரிமை இருக்கிறது; ஆச்சாரியார் அதை ஒட்டி, தம் கருத்தை எங்கும், எப்போதும் தெரிவிக்க உரிமை பெற்றிருக்கிறாரல்லவா?' என்று கேட்டாராம்!

பொதுவில் ஆச்சாரியாரின் இந்தப் போக்கு பல உறுப்பினர்களுக்கு கொதிப்பை உண்டு பண்ணியிருக்கிறதாகத் தெரிகிறது.

ஆச்சாரியாரின் இரட்டை நாக்கு அம்பலம்

பதவியிலிருந்தபோது பி.சி.ஜி. ஊசிக்கு ஆதரவு

பதவி போனதும் தீவிர எதிர்ப்பு

சென்னை, ஆக. 19—

"1948-ம் ஆண்டிலேயே பி.சி.ஜி. இயக்கம் ஆரம்பமாயிற்று; ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்தபோது, இந்த இயக்கத்தை, தலைச்சேரியில் பரவலாக நடத்தலாம் என்று முடிவு செய்தார்; ஆனால், அவர் பதவியிலிருந்து விலகிய பின்னர், இதற்கு விரோதமாகப் பிரசாரம் செய்ய முற்பட்டார்,"

என்று, சென்னை சட்டசபை கேள்வி நேரத்தின்போது, சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டி அறிவித்துள்ளார்.

தூதுவராலயங்கள் மூடப்படும்

கோவா கவர்னர் - ஜெனரல் அறிவிப்பு

பெல்காம், ஆக. 19—

"இந்தியாவில் உள்ள போர்ச்சுகீசிய கிளை தூதுவராலயங்கள் உடனடியாக மூடப்படும்," என்று கோவா கவர்னர்-ஜெனரல் கேடஸ் அறிவித்திருக்கிறார்.

கோவாவில் உள்ள இந்தியத் தூதுவரையும் வெளியேறிவிடுமாறு அவர் கோரியிருக்கிறார்.

"இந்தியாவில் உள்ள கிளை தூதுவராலயங்களை மூடினால், போர்ச்சுகலுக்கு 'சகல உதவிகளும் அளிக்கத் தயார்," என்று, கோவா கவர்னர்-ஜெனரலுக்கு பிரேஜில் சர்க்கார் தந்தி அனுப்பியிருப்பதாக கோவா வானொலி கூறியதாம்!

தடை நீங்காது!

புதுடில்லி, ஆக. 19—

வெளிநாடுகளிலிருந்து இந்தியாவில் பட்டு ஜவுளிகள் இறக்குமதியாகக்கூடாது என்று உள்ள தடையை இந்திய சர்க்கார் நீக்கப் போவதில்லை என்று மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

நெல்லை மாவட்டத்தில் அண்ணுதுரை

சுற்றுப்பயணம்

★

21 காலை 10 மணி: பாளையங்கோட்டை; மாலை 6 மணி: தூத்துக்குடி.

கழகக் கூட்டங்கள்

★

புதியம்புத்தூர்
மிசின் தோட்டத்தில்
21—8—55 இரவு $8\frac{1}{2}$ மணிக்கு
தலைவர்: கே. வி. கே. சாமி
பேசுபவர்:
சி. என். அண்ணுதுரை

★

குடந்தை
பாணுதுறை தெற்கு வீதியில்
21—8—55 மாலை 5 மணிக்கு
தலைவர்: குடந்தை-வில்லாளன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
என். கிட்டப்பா

★

அக்கரைவட்டம்

21—8—55 மாலை 6 மணிக்கு, காளியம்மன் கோவில் திடலில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், என். கிட்டப்பா, கே. எஸ். செளந்தரராசன் ஆகியோர் பேசுவர்.

★

பெரியகுளம் (மதுரை மா.)
பெரியார் திடலில்
23—8—55 மாலை 5 மணிக்கு
தலைவர்: வீ. வே. குருசாமி
பேசுவோர்:
சி. என். அண்ணுதுரை
அ. பொன்னம்பலனார்
எஸ். முத்து

தஞ்சை மாவட்ட

தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்களுக்கு

"தஞ்சை மாவட்ட தி. மு. கழக செயற்குழுக் கூட்டம், 28—8—55 ஞாயிறு காலை 11 மணிக்கு முத்துப்பேட்டையில் நடைபெறும். பொதுக் குழுவிற்கு ஒரு உறுப்பினர் தேர்தல், மாநில மாநாட்டு நிதி, செயலாளரால் கொணரப்படும் பிற விஷயங்கள் ஆய்வுக்கு வரும்; உறுப்பினர்கள் அருள்கூர்ந்து வருகைதந்து யோசனைகள் கூறவேண்டுகிறேன்,"

என தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அறிவிக்கிறார்.

சென்னை 24-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு

21—8—55 மாலை 3 மணிக்கு, சென்னை 24-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் கழக அலுவலகத்தில் நடைபெறும்

சென்னை 44-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

21—8—55 காலை 9 மணிக்கு சென்னை 44-வது தி. மு. கழக செயற் குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது, சில முக்கியப் பிரச்சினைகள் மேற்கொள்ளப்படும்.

திருமணங்கள்

21—8—55ல், சென்னை சிந்தாதிரிப்பேட்டை, சிங்கண்ண செட்டி தெரு 51-எண்ணுள்ள கனகவேலு திருமண மண்டபத்தில், தோழர் கோவிந்தராசன் — தோழியர் காமாட்சியம்மாள்; தோழர் ஜெயராமன்—தோழியர் நாகரெத்தினம் திருமணங்கள், முறையே 8 மணி; $9\frac{1}{2}$ மணியளவில், ஆசிரியர் தோழர் அ. கு. பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மாநில மாநாட்டு நிதிக் கூட்டம்

இடம்: சென்னை கோகலே மன்றம்
நாள்: 21—8—55 ஞாயிறு காலை 9 மணிக்கு
தலைவர்: முல்லை சத்தி
பேச்சாளர்: சி. பி. சிற்றரசு
பொருள்: ஜூலியஸ் சீசரும்-ஜோன் ஆப் ஆர்க்கும்

★

நன்கொடை: அணா 8, 4

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

'சண்டே அப்சர்வர்'

(THE SUNDAY OBSERVER)
(ஆங்கில வார இதழ்)
ஆசிரியர்: பி. பாலசுப்பிரமணியனார்

★

விலை: தனி இதழ் .... அணா 2
ஆண்டுச் சந்தா ரூ. 8; ஆறு மாதச் சந்தா ரூ. 4
47, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு,
மவுண்ட் ரோடு, சென்னை—2

நேருவின் உளுத்துப்போன......

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

—தென்னாட்டு வீராங்கனையின்—மகத்தான உயிரை போர்ச்சுகீசிய சர்க்கார் பலி வாங்கினர் என்றால், இதை நினைக்குந்தோறும் நமது உள்ளம் துடிக்கிறது; இக்கொடுமை இவ்வாறே நடைபெற அனுமதிப்பது விவேகமாகுமா என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியத்திற்கு ஒரு வார தவணை கொடுக்க வேண்டும்; கோவாவை விட்டு அதற்குள் வெளியேறவில்லையெனில் இந்தியப் பேரரசு போலீஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும்; இவ்விதம் செய்யப்படுமாயின் திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நாங்கள் எங்கள் பொதுக்குழுவின் வாயிலாகவும், பொதுச்செயலாளரிடமும் அனுமதிபெற்று, ஆயிரக்கணக்காகக் களத்திற்கு வரத் தயார் என்பதைக் கழகச் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். (அதிர்ச்சியடையத்தக்க கை தட்டுதல் கூட்டத்தினரிடையே எழுப்பப்பட்டது.)

'இதற்குத் துணிவில்லை — அல்லது, மனமில்லையென்றால், இந்தியப் பிரதமர் கோவாவை மறந்து விடட்டும்; விடுதலை வீரர்களின் மகத்தான உயிரை வீணாக போர்ச்சுகீசிய சர்க்காருக்குப் பலியாக்க வேண்டாம் (மேலும் கை தட்டுதல்) என்பதைப் பணிவன்புடன் இந்திய சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்."

"எனது நண்பர் ஜீவானந்தம் பேசுகையில், 'கோவா போராட்டத்தில், வடநாடு — தென்னாடு என்ற பிரிவான இரத்தம் சிந்தப்படவில்லை; வங்காளம், பஞ்சாப், உத்திரப் பிரதேசம்—இப்படியாக எல்லோருடைய, அதாவது இந்திய இரத்தம் சிந்தப்படுவதாகக் கூறினார்;

"இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எல்லா நாட்டினருடைய இரத்தம் அப்போராட்டத்தில் சிந்தப்பட்டாலும், தென்னாட்டாரின் இரத்தத்தில்தான் தன்மானம் அதிகம் அடங்கியிருக்கிறதென்பதை நினைவூட்ட விரும்புகிறேன். தேசியப் போராட்டங்களில்கூட தென்னாட்டவர் சிந்திய இரத்தத்திற்கு இணையாக மற்றவர்களை ஒப்பிட முடியாது; ஏன்—கோவாவில் நேற்று 29 வீரர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதில், தலைமை தாங்கிச் சென்ற வீராங்கனை தென்னாட்டு உத்தமிதான் என்பதை எவரும் மறைத்துவிட முடியாது; எனவே, தென்னாட்டு மக்களின் உடலிலுள்ள இரத்தம் தன்மானமுடையதாகும்.

"அப்பேர்ப்பட்ட தென்னாட்டு மக்களின் ஒத்துழைப்பைப் பெற்று போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியத்தின் ஆணவத்தை அடக்க இந்தியப் பிரதமர் இனியாவது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

"கோவா போராட்டத்தில் உயிர் துறந்த வீரர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் பணிவன்பான இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வீரர்களின் மகத்தான தியாகம் இந்தியப் பிரதமரின் கண்களைத் திறக்கச் செய்ய வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்."

★

போராட்டத்தில் கோவை வீரர்கள்!

11 பேர்களில் 8 பேரே திரும்பியுள்ளனர்

கோவை, ஆக. 18—

கடந்த ஆகஸ்டு 15-ந் தேதியன்று பெல்காமிலிருந்து கோவா எல்லைக்குள் நுழைந்த கோவையைச் சேர்ந்த 11 தொண்டர்கள் மீது போர்ச்சுகீசியப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இங்கு திரும்பியுள்ள 8 தொண்டர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

அவர்கள் எட்டு பேர் மீதும் காயங்கள் தென்பட்டன.

இருவர் சிகிச்சைக்காக பெல்காமில் தங்கிவிட்டதாகவும், மற்றொருவர் காணப்படவில்லை என்றும், அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

தொண்டர்களுக்கு சிறந்ததோர் வரவேற்பு அளிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.